Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/42**

Paper 4 Texts **May/June 2023**

**2 hours 30 minutes**

You must answer on the enclosed answer booklet.

You will need: Answer booklet (enclosed)

**INSTRUCTIONS**
- Answer **three** questions in total in **Tamil**, each on a different text:
  - Answer **at least one question** from Section 1.
  - Answer **at least one question** from Section 2.
  - Answer **one other question** from **either** Section 1 **or** Section 2.
- Follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper, ask the invigilator for a continuation booklet.
- Dictionaries are **not** allowed.
- You may **not** take set texts into the examination.

**INFORMATION**
- The total mark for this paper is 75.
- Each question is worth 25 marks.

## கட்டளைகள்
- மொத்தம் மூன்று கேள்விகளுக்கு, வெவ்வேறு பாடப் பகுதிகளிலிருந்து, எடுத்து, **தமிழில்** விடை எழுதவும்:
  - முதல் பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - இரண்டாவது பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - முதல் **அல்லது** இரண்டாவது பகுதியிலிருந்து **மற்றொரு கேள்விக்கு** விடை எழுதவும்.
- விடை எழுதுவதற்கான புத்தகத்தின் முதல் பக்கத்திலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். கூடுதல் விடைத் தாள்கள் தேவைப்பட்டால், தேர்வு அதிகாரியிடம், தொடர்ச்சிக்கான புத்தகத்தைக் கேட்கவும்.
- அகராதிகள் **அனுமதிக்கப்படமாட்டாது**.
- தேர்வு அறைக்குள் எந்தப் பாடப் புத்தகத்தையும் எடுத்துச் **செல்லக்கூடாது**.

## தகவல்
- இந்தக் கேள்வித்தாளுக்கான மொத்த மதிப்பெண்கள் 75.
- ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள்.

This document has **12** pages. Any blank pages are indicated.


© UCLES 2023

**விடைத்தாள் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டளைகள்**

கருப்பு அல்லது கரு நீலப் பேனாவைப் பயன்படுத்தவும்.

வரைபடங்களுக்கோ, கிராப் வரையவோ நீங்கள் எச்.பி.பென்சிலைப் பயன்படுத்தலாம்.


உங்களுடைய பெயர், சென்டர் எண், உங்கள் எண் ஆகியவற்றை, இந்தப்பக்கத்தின் மேலேயுள்ள, அதற்கான இடத்தில் எழுதவும். தெளிவாக, பெரிய எழுத்துக்களில் எழுதவும்.

எழுத்துக்களை அழிப்பதற்கான பேனாவையோ, திரவத்தையோ **பயன்படுத்தக்கூடாது**.

எந்த பார்க்கோடிலும் **எழுதக்கூடாது**.

கொடுக்கப்பட்ட விடைத்தாள் புத்தகத்தில் எழுதவும். தாளின் இரு பக்கங்களிலும் எழுத வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் விடை எழுதிய பின்னர் இரண்டு வரி இடைவெளி விடவும்.

நீங்கள் விடை எழுதும் கேள்வியின் எண்ணை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீங்கள் விடை எழுதும் கேள்வியில் துணைக் கேள்விகள் இருந்தால் (எடுத்துக்காட்டு 1.a) துணைக் கேள்வி எண்ணை இரண்டாவது மார்ஜினில் எழுதுங்கள்.

நீங்கள் விடைத்தாள் புத்தகத்தில், விடை எழுதுவதற்கான குறிப்புகளையும் பேனாவால் எழுதிப் பழகலாம் ஆனால் மதிப்பெண். **போடவேண்டாத** அத்தகைய குறிப்புகளை அடித்து விடுங்கள். படிக்கமுடியாமல் அடிக்கத் தேவை இல்லை.

விடைத்தாள் புத்தகத்தின் எந்தப் பகுதியயையும் **கிழித்துவிடாதீர்கள்**.

நீங்கள் எழுதிய எல்லா தாள்களையும் கொடுத்து விடுங்கள் தொடர்ச்சிக்காக விடைத்தாள். புத்தகங்கள் வாங்கியிருந்தால் அவற்றையும் விடைத் தாள் புத்தகத்தில் இணைத்து விடுங்கள்.

© UCLES 2023 

BLANK PAGE

**ஏதாவது மூன்று கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியிலிருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியிலிருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டிலிருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.**

**பகுதி 1**

**1** **பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** புறநானூறு

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும், என்றாங்கு

ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்
வலியும், தெறலும், அளியும், உடையோய்!
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்
வெண்தலைப் புணரிக் குடகடல் குளிக்கும்

யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந!
வான வரம்பனை! நீயோ பெரும!
அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒழியப்

பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!
பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்
நாஅல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ அத்தை; அடுக்கத்துச்

சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை

அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்

முத்தீ விளக்கில் துஞ்சும்

பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே. - முரஞ்சியூர் முடிநாகனார்

**(i)** இப்பாடலில், நிலம், வானம், காற்று, நெருப்பு, நீர் என்ற ஐம்பெரும் பூதங்களை மன்னன் உதியஞ்சேரலாதனின் எந்தெந்த குணநலங்களுக்கு ஒப்பிட்டு பாடுகிறார் ஆசிரியர்?

**(ii)** தலைவனை வாழ்த்தும் இப்பாடல் ஒரு அரசன் தான் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு வலியுறுத்தும் நயத்தை விளக்கவும். [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம்** - **இளங்கோ அடிகள்**

கோவலன் பெயரை பயன்படுத்தி தான் செய்த கள்ளத்தனத்தை மறைக்க பொற்கொல்லன் செய்த சதியின் விளைவு என்ன என்று விளக்கவும். [25]

**2 திருக்குறள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** வசையென்ப வையத்தார்க்கு எல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**(i)** மேற்கூறிய மூன்று குறள்களில் வசை, இசை என்ற இரு சொற்களின் விளக்கம் என்ன?

**(ii)** புகழின் அடிப்படை, புகழின் சிறப்பு, மேன்மை மற்றும் புகழில்லாதவர்களின் தாழ்வு இவற்றை இவ்வதிகாரம் எப்படி விளக்குகிறது? [25]

**அல்லது**

**(b)** பழகும் பண்பாடு, நற்பண்புள்ளவரின் நல்ல குணம் இவற்றால் இவ்வுலகம் உள்ளது என்பதை 'பண்புடைமை' அதிகாரம் 10 குறள்களில் எவ்வாறு விளக்குகிறது? [25]

**3 தேவாரம் - திருஞான சம்பந்தர்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்

அத்தாவுன் னடியலால் அரற்றாதென்னாப்

புத்தருஞ் சமணரும் புறன்உரைக்கப்

பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்

அதுவோ உனதின்னருள் ஆவடு துறைஅரனே

**(i)** பக்தர்களுக்கு அருள் செய்தே பயின்ற இறைவனை எவ்வாறெல்லாம் போற்றிப் பாடுகிறார் திருஞான சம்பந்தர்?

**(ii)** 'அத்தா' என்று விளிப்பதிலும் 'அரற்றாது' என்று கூறுவதிலும் உள்ள பொருள் என்ன? [25]

**அல்லது**

**(b)** திருஞானசம்பந்தர் அருளிய அருந்தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகத்தை ஓதுபவர்கள் விண்ணுலகில் நிலையாக வீற்றிருப்பர் என்பதற்கு இப்பதிகம் தரும் சான்றுகள் என்ன? [25]

**பகுதி 2**

**4 இக்காலக் கவிதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a) பாரதியார்**
"குழந்தைகள் வாழ்ந்திடும் பட்டணங்காண்", என்றும் "குழந்தைக ளாட்டத்தின் கனவை யெல்லாம்-அந்தக் கோலநன் னாட்டிடைக் காண்பீரே" என்றும் ஒரு குழந்தை நிலையில் இருந்து 'கற்பனையூர்' என்ற பாடலில் பாரதியார் கையாண்டிருக்கும் எளிய நடையை விளக்கவும். [25]

**அல்லது**

**(b) பாரதிதாசன்**
விவசாயியின் உழைப்பு, பொறுமை போன்ற சிறப்பு குணநலன்களை 'புது நாளினை எண்ணி உழைப்போம்' என்னும் பாடலில் கவிஞர் எவ்வாறு விளக்குகிறார்? [25]

**5 நாவல், அந்த நாள் - டாக்டர் மு வரதராசனார்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** 1940-களில் பர்மாவிலிருந்து ஓடி வந்த தமிழர்கள் பட்ட துன்பங்களை 'அந்த நாள்' நாவல் எடுத்துரைக்கும் முறையை விளக்குக. [25]

**அல்லது**

**(b)** நாட்டுப்பற்றையும், பயன் கருதாது நாட்டுக்கு பணிபுரியும் பண்பையும் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டதுதான் இந்த நாவல் என்பதை ஏற்கிறீர்களா? [25]

**6 தமிழ் சிறுகதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** 'காட்டில் ஒரு மான்' கதையில் ஆசிரியர் அம்பை சொல்வது தங்கம் அத்தையின் கதையா அல்லது தங்கம் அத்தை குழந்தைகளுக்கு சொல்லும் கதையா? [25]

**அல்லது**

**(b)** "நாற்காலி இல்லாததும் ஒரு வீடா?" என்று தொடங்கும் கி. ராஜநாரயணனின் சிறுகதையில், நாற்காலி வந்தவுடன் அந்த வீடு எதிர்கொள்ளும் திருப்பங்களை விளக்குக. [25]

© UCLES 2023

**BLANK PAGE**

© UCLES 2023 

**BLANK PAGE**

BLANK PAGE

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.